IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**CC. 798 /2025 Date : 10.07.2026 P.W. 3/ LW.4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வைத்தியலிங்கம் | ஆதார்எண் | |
| தந்தை பெயர் | வீரன் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | சிறுநாகலூர் | வயது | 45 |
| 1, 2 எதிரிகள் ஆஜர் . வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை..**

நான் சிறுநாகலூரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும்.ஆஜர் எதிரிகளை தெரியாது. சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக அ.சா.1 வீட்டிற்கு நான் சென்று விசாரித்தபோது, தனது வீட்டில் இருந்த 16 கிராம் நகை களவுபோனதாக சொன்னார். அ.சா.1 வெளியில் வண்டி ஓட்டிக்கொண்டிருந்ததாகவும் வீட்டில் இருந்தவர்கள் ஏரிவேலைக்கு சென்றிருந்ததாகவும் கூறினார். பன்னீர் செல்வம் என்பவர் அவர் வீட்டில் களவு போனதாகவும் அதனால் அவர் வீட்டில் சென்று என்னை பார்க்கசொன்னார். நான் வீட்டிற்கு சென்ற பார்த்தபோது வீட்டின் இரண்டு கதவுகள் உடைக்கப்பட்டிருந்தது. மரபீரோ பூட்டு கம்பியால் உடைக்கப்பட்டிருந்தது. நகைகள் இல்லை. இதைநான் பன்னீர் செல்வத்திடம் சொன்னேன் அவர் உடனே வீட்டிற்கு வந்துவிட்டார். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் பன்னீர்செல்வம் வீட்டிற்கு சென்று பார்ப்பதற்கு முன்பே போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். போலிசார் வந்து பார்த்தபிறகு தான் சம்பவ இடத்திற்கு பன்னீர் செல்வம் வந்தார் என்றால் சரிதான். அ.சா.1 போன் செய்து தகவல் சொல்லிதான் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான்.

2. சம்பவ இடத்தில் நான் சென்று பார்த்தபோது கதவுகள் உடைக்கபட்டிருந்தது என்றால் சரிதான், என்ன பொருட்கள் களவு போயிருந்தது என்றால் தெரியாது. சம்பவத்தன்றே சம்பவ இடத்தில் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

மறுவிசாரணை – இல்லை.

Typed by Typist – E. Veeramani

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

V GOMATHI

Digitally signed by V GOMATHI
Date: 2026.07.10 19:07:10 +0530

Judicial Magistrate-I,
Ulundurpet.